# *2019 தமிழ் போட்டிகள் / Tamil Competition*

# திருக்குறள் & பழமொழிகள்

| S.No | Kural No | Kural | Meaning |
|---|---|---|---|
| 1 | 1 | அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு | எழுத்துக்கள் எல்லாம் அகரத்தில் தொடங்குகின்றன; (அது போல) உலகம் கடவுளில் தொடங்குகிறது. |
| 2 | 6 | பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க<br>நெறிநின்றார் நீடுவாழ் வார் | மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளின் வழிப் பிறக்கும் தீய ஆசைகளை அழித்து கடவுளின் பொய்யற்ற ஒழுக்க வழியிலே நின்றவர் நெடுங்காலம் வாழ்வார் |
| 3 | 7 | தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்<br>மனக்கவலை மாற்றல் அரிது | தனக்கு இணையில்லாத கடவுளின் திருவடிகளைச் சேர்ந்தவர்க்கே அன்றி, மற்றவர்களுக்கு மனக்கவலையைப் போக்குவது கடினம் |
| 4 | 10 | பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்<br>இறைவன் அடிசேரா தார் | வாழ்க்கை எனும் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைவோர், தலையானவனாக இருப்பவனின் அடி தொடர்ந்து செல்லாவிடில் நீந்த முடியாமல் தவிக்க நேரிடும் |
| 5 | 11 | வானின் றுலகம் வழங்கி வருதலால்<br>தானமிழ்தம் என்றுணரற் பாற்று | உரிய காலத்தில் இடைவிடாது மழை பெய்வதால்தான் உலகம் நிலைபெற்று வருகிறது; அதனால் மழையே அமிழ்தம் எனலாம் |
| 6 | 13 | விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து<br>உள்நின் றுடற்றும் பசி | உரிய காலத்தே மழை பெய்யாது பொய்க்குமானால், கடல் சூழ்ந்த இப்பேருலகத்தில் வாழும் உயிர்களைப் பசி வருத்தும் |
| 7 | 25 | ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்<br>இந்திரனே சாலுங் கரி | அகன்ற வானத்து வாழ்பவரின் இறைவனாகிய இந்திரனே, புலன்வழிப் பெருகும் ஆசை ஐந்தையும் அறுத்தவனின்வலிமைக்குத் தகுந்த சான்று ஆவான் |
| 8 | 26 | செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்<br>செயற்கரிய செய்கலா தார் | பிறர் செய்வதற்கு முடியாத செயல்களைச் செய்பவரே மேன்மக்கள்; செய்ய முடியாதவரோ சிறியவரே. |
| 9 | 35 | அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்<br>இழுக்கா இயன்ற தறம் | பிறர் மேன்மை கண்டு பொறாமை, புலன்கள் போகும் வழிச் செல்லும் ஆசை, இவை தடைபடும் போது வரும் கோபம், கோபத்தில் பிறக்கும் தீய சொல் எனும் இந்நான்கையும் விலக்கித் தொடர்ந்து செய்யப்படுவது அறம் |

| | | | |
|---|---|---|---|
| 10 | 43 | தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு<br>ஐம்புலத்தா றோம்பல் தலை | இறந்து தென்திசையில் வாழ்பவர், தேவர்கள், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்து பேருக்கும் செய்ய வேண்டிய அறத்தைத் தவறாமல் செய்வது சிறப்பு |
| 11 | 47 | இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்<br>முயல்வாருள் எல்லாம் தலை | கடவுளை அறியவும், அடையவும் முயல்பவருள் மனைவியோடு கூடிய வாழ்க்கையை அதற்குரிய இயல்புகளோடு வாழ்பவனே முதன்மையானவன் |
| 12 | 49 | அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்<br>பிறன்பழிப்ப தில்லாயின் நன்று | அறம் என்று சிறப்பிக்கப்பட்டது, மனைவியுடன் வாழும் வாழ்க்கையே; துறவற வாழ்க்கையும், பிறரால் பழிக்கப்படாமல் இருக்குமானால் நல்லது. |
| 13 | 50 | வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்<br>தெய்வத்துள் வைக்கப் படும் | மனைவியுடன் வாழும் வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்பவன், பூமியில் வாழ்ந்தாலும், வானத்துள் வாழும் தேவருள் ஒருவனாகவே மதிக்கப்படுவான் |
| 14 | 53 | இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்<br>இல்லவள் மாணாக் கடை | நல்ல குணமும் நல்ல செயல்களும் உடையவனாய் மனைவி அமைந்துவிட்டால் ஒருவனுக்கு இல்லாததுதான் என்ன? அமையாவிட்டால் அவனிடம் இருப்பதுதான் என்ன? |
| 15 | 63 | தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்<br>தந்தம் வினையான் வரும் | பிள்ளைகளைத் தம் செல்வம் என்று அறிந்தோர் கூறுவர். அப்பிள்ளைகள் உள்ளபடியே செல்வமாவது அவரவர் செய்யும் நற்செயல்களால் அமையும் |
| 16 | 71 | அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்<br>புண்கணீர் பூசல் தரும் | அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்<br>புண்கணீர் பூசல் தரும் |
| 17 | 77 | என்பி லதனை வெயில்போலக் காயுமே<br>அன்பி லதனை அறம் | எலும்பு இல்லாத புழுவை வெயில் காய்ந்து கொள்வது போல அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காய்ந்து கொல்லும். |
| 18 | 78 | அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்<br>வற்றல் மரந்தளிர்த் தற்று | மனத்தில் அன்பு இல்லாமல் குடும்பத்தோடு வாழும் வாழ்க்கை, வறண்ட பாலை நிலத்தில் காய்ந்து சுக்காகிப் போன மரம் மீண்டும் இலை விடுவது போலாம் |

| | | | |
|---|---|---|---|
| 19 | 80 | அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு | அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும் |
| 20 | 83 | வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று | நாளும் வரும் விருந்தினரைப் பேணுபவனின் வாழ்க்கை வறுமைப்பட்டுக் கெட்டுப் போவது இல்லை |
| 21 | 90 | மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து | அனிச்சம் எனப்படும் பூ, முகர்ந்தவுடன் வாடி விடக் கூடியது அதுபோல் சற்று முகங்கோணி வரவேற்றாலே விருந்தினர் வாடிவிடுவர் |
| 22 | 95 | பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற | தகுதிக்குக் குறைவானவரிடமும் பணிவுடன் இனிய சொற்களைச் சொல்பவனாக ஆவது ஒருவனுக்கு ஆபரணம் ஆகும்; பிற அணிகள் அணி ஆகா |
| 23 | 103 | பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது | இன்ன பயன் கிடைக்கும் என்றுஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிட பெரியதாகும் |
| 24 | 107 | எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமந் துடைத்தவர் நட்பு | தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர் |
| 25 | 109 | கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த ஒன்றுநன் றுள்ளக் கெடும் | ஒருவர் செய்யும் மிகக் கொடுமையான தீமைகூட நமது உள்ளத்தைப் புண்படுத்தாமல் அகன்றுவிட வேண்டுமானால், அந்த ஒருவர் முன்னர் நமக்குச் செய்த நன்மையை மட்டும் நினைத்துப் பார்த்தாலே போதுமானது |
| 26 | 114 | தக்கார் தகவிலர் என்ப தவரவர் எச்சத்தாற் காணப் படும் | நடுவுநிலைமை உடையவர் நடுவுநிலைமை இல்லாதவர் என்பது அவரவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழாலும் பழியாலும் காணப்படும் |
| 27 | 121 | அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும் | அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்தி விடும் |

| | | | |
|---|---|---|---|
| 28 | 138 | நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் | நல்லொழுக்கம், அறமாகிய நன்மைக்கு வித்தாக அமைந்து இம்மை மறுமையிலும் இன்பம் தரும்; தீயொழுக்கமோ துன்பமே தரும். |
| 29 | 155 | ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து | தனக்குத் தீமை செய்தவரைப் பொறுக்காமல் தண்டித்தவரைப் பெரியோர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்; பொறுத்துக் கொண்டவரையோ பொன்னாகக் கருதி மதிப்பர் |
| 30 | 179 | அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந் திறனறிந் தாங்கே திரு | அறம் இஃது என்று அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் சேரும் திறன் அறிந்து அதற்கு ஏற்றவாறு சேர்வாள். |
| 31 | 181 | அறங்கூறா னல்ல செயினும் ஒருவன் புறங்கூறா னென்றல் இனிது | ஒருவன் அறத்தைச் சொல்லாமல் பாவமே செய்தாலும், அடுத்தவரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்றால் அதுவே அவனுக்கு நல்லது |
| 32 | 184 | கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க முன்னின்று பின்னோக்காச் சொல் | எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது |
| 33 | 186 | பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந் திறன்தெரிந்து கூறப் படும் | மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான் |
| 34 | 190 | ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின் தீதுண்டோ மன்னு முயிர்க்கு | அயலாருடைய குற்றத்தைக் காண்பது போல் தம் குற்றத்தையும் காண வல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ? |
| 35 | 202 | தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும் | நமக்கு நன்மை என்று பிறருக்குச் செய்யும் தீமைகள், நமக்குத் தீமையே தருவதால், தீமைகளைத் தீயினும் கொடியனவாக எண்ணிச் செய்ய அஞ்ச வேண்டும் |
| 36 | 214 | ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும் | உழைக்கும் சக்தி அற்றவர்க்கு உதவுபவனே உயிரோடு வாழ்பவன். உதவாதவன் இருந்தாலும் இறந்தவனாகவே எண்ணப்படுவான் |

| | | | |
|---|---|---|---|
| 37 | 226 | அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி | ஏதும் இல்லாதவரின் கடும்பசியைத் தீர்த்து வையுங்கள். பொருளைப் பெற்றவன் சேமித்து வைக்கும் இடம் அதுவே. |
| 38 | 231 | ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல தூதிய மில்லை உயிர்க்கு | கொடைத் தன்மையும், குன்றாத புகழும்தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக் கூடியது வேறெதுவும் இல்லை |
| 39 | 243 | அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல் | அருள் நிறைந்த மனம் படைத்தவர் அறியாமை எனும் இருள் சூழ்ந்த துன்ப உலகில் உழலமாட்டார் |
| 40 | 291 | வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றந் தீமை யிலாத சொலல் | உண்மை என்று சொல்லப்படுவது எது என்றால், எவர்க்கும் எத்தகைய தீங்கையும் தராத சொற்களைச் சொல்வதே ஆகும் |
| 41 | 293 | தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் தன்நெஞ்சே தன்னைச் சுடும் | ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக்குறித்துப் பொய்ச் சொல்லக்கூடாது, பொய் சொன்னால் அதைக்குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும் |
| 42 | 294 | தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லுஞ் சினம் | ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதானால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும், காக்கா விட்டால் சினம் தன்னையே அழித்து விடும் |
| 43 | 322 | பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர் தொகுத்தவற்று ளெல்லாந் தலை | கிடைத்ததைப் பகுந்து கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும் |
| 44 | 706 | அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் | தன்னை அடுத்தப் பொருளைத் தன்னிடம் காட்டும் பளிங்கு போல், ஒருவனுடைய நெஞ்சில் மிகுந்துள்ளதை அவனுடைய முகம் காட்டும் |
| 45 | 722 | கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன் கற்ற செலச்சொல்லு வார் | கற்றவரின் முன் தாம் கற்றவைகளைச் அவருடைய மனதில் பதியுமாறுச் சொல்லவல்லவர், கற்றவர் எல்லாரிலும் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார் |
| 46 | 872 | வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை | வில்லை ஏராக உடைய உழவராகிய வீரருடன் பகை கொண்ட போதிலும், சொல்லை ஏராக உடைய உழவராகிய அறிஞருடன் பகை கொள்ளக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| 47 | 879 | இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து | முள்மரத்தை, அது சிறிய கன்றாக இருக்கும்போதே கிள்ளி எறிவது போல, பகையையும், அது முற்றுவதற்கு முன்பே வீழ்த்திட வேண்டும் |
| 48 | 882 | வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு | வாளைப்போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை, ஆனால் உறவினரைப் போல் இருந்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும் |
| 49 | 948 | நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் | நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்கு பொருந்தும் படியாகச் செய்யவேண்டும் |
| 50 | 1033 | உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர் | உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே. |

| S.No | Proverbs / பழமொழிகள் |
|---|---|
| 1 | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் |
| 2 | அகல உழுகிறதை விட ஆழ உழு. |
| 3 | அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா? |
| 4 | அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள். |
| 5 | அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். |
| 6 | அடியாத மாடு படியாது. |
| 7 | அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர். |
| 8 | அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் |
| 9 | அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும். |
| 10 | அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. |
| 11 | அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா? |
| 12 | ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுப்பதில்லை. |
| 13 | ஆடையில்லாதவன் அரை மனிதன். |
| 14 | ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. |
| 15 | ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. |

| | |
|---|---|
| 16 | ஆலை இல்லாத ஊரிலே இலுப்பைபபூ சக்கரை. |
| 17 | ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலம் தரும். |
| 18 | ஆழமறியாமல் காலை இடாதே. |
| 19 | ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு. |
| 20 | ஆறின கஞ்சி பழங் கஞ்சி. |
| 21 | ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு. |
| 22 | ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் |
| 23 | ஆனை வரும் பின்னே. மணி ஓசை வரும் முன்னே |
| 24 | ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம். |
| 25 | ஆனைக்கும் அடிசறுக்கும். |
| 26 | இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை. |
| 27 | இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான். |
| 28 | இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர். |
| 29 | இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை. |
| 30 | இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது. |
| 31 | **இலவு காத்த கிளி போல** |
| 32 | **இல்லது வாராது, உள்ளது போகாது** |
| 33 | இல்லாது பிறாவது அள்ளாது குறையாது. |
| 34 | இளங்கன்று பயமறியாது. |
| 35 | இளமையில் சோம்பல் முதுமையில் வருத்தம். |
| 36 | இறைக்கிற ஊற்றே சுரக்கும். |
| 37 | **ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாள் ஆக்குகிறான்** |
| 38 | உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல். |
| 39 | உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது. |
| 40 | உப்பிட்டவரை உள்ளளவும் நினை. |
| 41 | உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? |
| 42 | உயிர் காப்பான் தோழன். |
| 43 | உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது. |
| 44 | உளவு இல்லாமல் களவு இல்லை. |
| 45 | உள்ளது போகாது இல்லது வாராது. |
| 46 | உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்? |
| 47 | **ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி**? |
| 48 | ஊருடன் ஒட்டி வாழ். |
| 49 | ஊருடன் பகைக்கின் வேறுடன் கெடும். |
| 50 | ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் |

| | |
|---|---|
| 51 | ஊர் வாயை மூட உலைமுடி இல்லை. |
| 52 | ஊழி பெயரினும் ஊக்கமது கைவிடேல். |
| 53 | எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடாதே. |
| 54 | எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம். |
| 55 | எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். |
| 56 | எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்கவேண்டும். |
| 57 | எய்தவன் இருக்க அம்பை நோவானேன் ? |
| 58 | எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும். |
| 59 | எலி வளையானாலும் தனி வலை வேண்டும். |
| 60 | எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். |
| 61 | எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும். |
| 62 | எள்ளு என்கிறதற்கு முன்னே எண்ணெய் கொண்டு வருகிறான். |
| 63 | ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. |
| 64 | ஏழைபேச்சு அம்பலம் ஏறாது. |
| 65 | ஐந்திலே வளையாதது, ஐம்பதிலே வளையுமா? |
| 66 | ஒட்டத்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள். |
| 67 | ஒரு காசு பேணின் இரு காசு தேறும். |
| 68 | ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம். |
| 69 | ஒரு கை தட்டினால் ஓசை எழும்புமா? |
| 70 | ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். |
| 71 | ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய். |
| 72 | ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம். |
| 73 | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. |
| 74 | ஓடும் நாயைக் கண்டால் துரத்தும் நாய்க்கு இளக்காரம். |